**ஜனவரி – 04**

# TNPSC துளிகள்

- அனைத்து மல்கானாக்களையும் டிஜிட்டல் வடிவில் மாற்றியுள்ள முதல் காவல் துறையாக டெல்லி காவல் துறை ஆகியுள்ளது. மல்கானா என்பது வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்கள் மற்றும் ஆதாரங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காக காவல் நிலையங்களில் உள்ள சேமிப்பு வசதியாகும்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையமானது பொதுச் சேவை மையங்கள் மூலமாக புகார்களைப் பதிவு செய்வதற்காக 14433 எனும் இலவச தொலைபேசி எண்ணைத் தொடங்கியுள்ளது. இந்த இலவச எண்ணானது ஆணையத்தின் அலுவல் நேரங்களில் மட்டுமே உபயோகப்படுத்த முடியும்.
- இந்திய அணியின் தலைவர் விராட் கோலி வெளிநாடுகளில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் அணித் தலைவராக இருந்து 11 முறை வெற்றி பெற்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான சவுரவ் கங்குலியின் சாதனையினைச் சமன் செய்துள்ளார். மேலும் இவர் ஆஸ்திரேலிய மண்ணில் பார்டர்-கவாஸ்கர் டிராபியைத் தக்க வைத்துக் கொண்ட முதல் இந்திய அணித் தலைவருமாவார்.
- அரசுக்குச் சொந்தமான அலகாபாத் வங்கி மற்றும் SBI ஆயுள் காப்பீடு ஆகியவை இணைந்து அலகாபாத் வங்கியின் 3238 கிளைகள் மூலமாக காப்பீடுகளை விற்க உள்ளன. இந்த ஒப்பந்தமானது நாட்டின் மிகப்பெரிய ஒரு காப்பீட்டு சேவை கூட்டிணைவாக கருதப்படுகிறது.
- சச்சின் டெண்டுல்கருக்குப் பயிற்சியளித்தவரும் 1990 ஆண்டின் துரோணாச்சார்யா விருது பெற்றவருமான பயிற்சியாளர் ரமாகாந்த் அச்ரேகர் தனது 86 வயதில் காலமானார்.
    - கிரிக்கெட் விளையாட்டில் இவரின் பங்களிப்பிற்காக 2010 ஆம் ஆண்டு இவர் பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- விராட் கோலி சர்வதேச ஆட்டத்தில் வேகமாக 19,000 ரன்களை எடுத்து சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முடியடித்துள்ளார்.
- வெப்ப மண்டல சூறாவளியான உஸ்மான் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலாவில் உள்ள பிகோல் பிராந்தியத்தைத் தாக்கியது. இது கடுமையான மழைப் பொழிவுடன் நாடு முழுவதும் பல இடங்களில் மோசமான நிலச்சரிவுக்கும் காரணமாகியுள்ளது.
- பெண்டகன் தனிக்கையாளரான டேவிட் நார்குயுஸ்ட் அமெரிக்காவின் பாதுகாப்புத் துறைக்கான தற்காலிக துணை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## IPC-ன் கீழ் மாற்றுப் பாலினத்தவர் பாலியல் வழக்குப் பதிவு செய்ய அனுமதி


- சமீபத்தில் தில்லி உயர்நீதி மன்றமானது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 354A என்ற விதியின் (Indian Penal Code - IPC) கீழ் மாற்று பாலினத்தவர்களும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு வழக்குப் பதிவு செய்ய முடியும் என உத்தரவிட்டுள்ளது.
- பாலியல் துன்புறுத்தல் மற்றும் அதற்கான தண்டனைகளைப் பற்றி இந்திய

தண்டனைச் சட்டப் பிரிவு 354A கூறுகிறது.

- இந்த உத்தரவானது ஒரு மாற்றுப் பாலினத்தைச் சேர்ந்த மாணவரின் பாலியல் துன்புறுத்தல் புகாரைப் பதிவு செய்வதற்கு பொருத்தமான தண்டனைப் பிரிவு இல்லையென காவல்துறையால் மறுக்கப்பட்டதின் விளைவாக பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 1926 ஆம் ஆண்டு தொழிற்சங்க சட்டத்தில் திருத்தம்

- தொழிற்சங்கங்களின் அங்கீகாரம் தொடர்பாக 1926 ஆம் ஆண்டின் தொழிற்சங்க சட்டத்தின் திருத்தத்திற்கு மத்திய அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.


Cabinet Decision January 2, 2019

**Amendments to the Trade Unions Act, 1926 to make provisions regarding Recognition of Trade Unions**

The approval will facilitate:


- Recognition of Trade Unions at Central and State level;
- Ensure true representation of workers in the tripartite bodies;
- Check on the arbitrary nomination of workers' representatives by the Government; and
- Reduce litigations and industrial unrest.

The proposed Bill will ensure that the nomination of workers' representatives in tripartite bodies by the government will become more transparent. Trade Unions so recognized would be accountable in maintaining industrial harmony. Recognition of Trade Unions at Central/State level would reduce duplicacy of such exercise by different departments. Recognized Trade Unions may be assigned specific roles at Central or State level.

- இந்த ஒப்புதலானது கீழ்க்காண்பனவற்றிற்கு வழி வகுக்கும்.
  - மத்திய மற்றும் மாநில அளவில் தொழிற்சங்கங்களின் அங்கீகாரம்.
  - முத்தரப்பு அமைப்புகளில் தொழிலாளர்களின் உண்மையான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துதல்.
- தற்போதைய சட்டமானது தொழிற்சங்கங்களை அங்கீகரிப்பதற்காக எந்தவொரு விதிமுறைகளையும் கொண்டிருக்காமல் தொழிற்சங்கங்களின் பதிவுகளை மட்டுமே அனுமதிக்கிறது.

## POCSO சட்டத்தில் திருத்தம்

- 2012 ஆம் ஆண்டின் பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த திருத்தங்களானது குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் குற்றங்களுக்குத் தண்டனையை அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- இந்த திருத்தங்களானது குழந்தைகள் மீதான மோசமான உடல் ரீதியாக ஊடுருவும் தன்மை கொண்ட பாலியல் வன்கொடுமை தாக்குதல்களுக்கு மரண தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் விதிப்பதற்கான வாய்ப்புகளை அளிக்கிறது.


#POCSO
Salient Features:

- The POCSO Act, 2012 was enacted to Protect the Children from Offences of Sexual Assault, Sexual harassment and pornography with due regard for safeguarding the interest and well-being of children. The Act defines a child as any person below eighteen years of age, and regards the best interests and welfare of the child as matter of paramount importance at every stage, to ensure the healthy physical, emotional, intellectual and social development of the child. The act is gender neutral.
- The amendment in Section-4, Section-5, Section-6, Section-9, Section-14, Section-15 and Section-42 of Protection of Children from Sexual Offences (POCSO) Act, 2012, is made to address the aspects of child sexual abuse in appropriate manner. The modification is made to address the need for stringent measures required to deter the rising trend of child sex abuse in the country.
- To discourage the trend of child sexual abuse by acting as a deterrent Section-4, Section-5 and Section-6 are proposed to be amended to provide option of stringent punishment, including death penalty, for committing aggravated penetrative sexual assault crime on a child to protect the children from sexual abuse.
- The amendments are also proposed in section-9 to protect children from sexual offences in times of natural calamities and disasters and in cases where children are administered, in any way, any hormone or any chemical substance, to attains early sexual maturity for the purpose of penetrative sexual assault.
- Section-14 and Section-15 of the POCSO Act, 2012 are also proposed to be amended to address the menace of the child pornography. It is proposed to levy fine for not destroying/or deleting/ or reporting the pornographic material involving a child. The person can be further penalized with jail term or fine or both for transmitting/propagating/administering such material in any manner except for the purpose of reporting as may be prescribed and for use as evidence in court. Penal provisions have been made more stringent for storing/possessing any pornographic material in any form involving a child for commercial purpose.

- பிரிவு எண் 9-ன் திருத்தமானது பேரிடர் மற்றும் இயற்கைப் பேரழிவு காலங்களிலும் குழந்தைகளுக்குப் பாலியல் துன்புறுத்தல்களில் இருந்து பாதுகாப்பை அளிக்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ஜெர்மனி – டென்மார்க் சாலை மற்றும் ரயில் வழி சுரங்கப்பாதை

- சுற்றுச்சூழல் பாதிப்பு சம்பந்தப்பட்ட எதிர்ப்புகள் உள்ள போதிலும் ஜெர்மனி மற்றும் டென்மார்க்கை இணைக்கும் இரயில் மற்றும் சாலை சுரங்கப் பாதைக்கு ஜெர்மானிய அதிகாரிகள் ஒப்புதல் அளித்துள்ளனர்.




- இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் பகுதியளவில் நிதியுதவி அளிக்கப்படுகிறது.
- 19 கி.மீ. நீளமுடைய இந்த பெஹ்மார்ன்பெல்ட் இணைப்பானது டென்மார்க்கின்

லோலாண்ட் தீவையும் ஜெர்மனியின் பெஹ்மார்ன் தீவையும் இணைக்கின்றது. இதன் பணிகள் 2024-ல் நிறைவடைய உள்ளது.

❖ இதன் பணிகள் நிறைவடைந்தால் இதுவே உலகின் மிக நீளமான சாலை மற்றும் இரயில் வழி சுரங்கப் பாதையாக இருக்கும்.

## UNSC-ன் தற்காலிக உறுப்பினர்கள்

❖ ஐ.நா. பொதுச் சபையின் பாதுகாப்பு அவையின் தற்காலிக உறுப்பினர்களாக கீழ்க்காணும் 5 நாடுகள் பொறுப்பேற்றுள்ளன.
  - பெல்ஜியம்
  - டொமினியன் குடியரசு
  - ஜெர்மனி
  - இந்தோனேஷியா
  - தென் ஆப்பிரிக்கா

❖ இந்த 5 நாடுகளும் 2019 ஜனவரி 1 முதல் அடுத்த இரண்டு ஆண்டு காலத்திற்கு பாதுகாப்பு அவையில் உறுப்பினர்களாக இருக்கும்.

| | |
|---|---|
| Permanent Members | China |
| | France |
| | Russian Federation |
| | the United Kingdom |
| | The United States |
| | |
| Non-permanent Members 2018 - 2019 | Côte d'Ivoire |
| | Equatorial Guinea |
| | Kuwait |
| | Peru |
| | Poland |
| | |
| Non-permanent Members 2019 - 2020 | Belgium |
| | Dominican Republic |
| | Germany |
| | Indonesia |
| | South Africa |

❖ டொமினியன் குடியரசானது முதன்முறையாக பாதுகாப்பு அவையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

❖ பொலிவியா, எத்தியோப்பியா, கஜகஸ்தான், நெதர்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய 5 நாடுகள் 2018 டிசம்பர் 31 ஆம் தேதி தனது 2 வருட காலத்தை முடித்த இடத்தினை இந்த நாடுகள் நிரப்பியுள்ளன.

# பொருளாதாரச் செய்திகள்

## MSME துறையைப் புதுப்பிப்பதற்கான RBI குழு

- இந்திய ரிசர்வ் வங்கியானது செபியின் முன்னாள் தலைவரான U.K. சின்ஹாவின் தலைமையில் 8 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவினை அமைத்துள்ளது.
- இந்த குழுவானது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME – Micro, Small and Medium) பிரிவின் பொருளாதார மற்றும் நிதிநிலைத் தன்மைக்கான நீண்ட காலத் தீர்வுகளை விரிவாக பரிசீலித்து முன்மொழியும்.
- MSME பிரிவானது பணமதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் GST நடைமுறைப்படுத்தலின் காரணமாக சிக்கல்களை எதிர்கொண்டு இருக்கின்றது.

## மாநிலங்களுக்கிடையேயான அலுவல் சேவைகளுக்கு GST

- கர்நாடகாவின் முன்பண தீர்வுகளுக்கான மேல்முறையீட்டு ஆணையமானது பல்வேறு மாநிலங்களில் அமைந்துள்ள ஒரே நிறுவனத்தின் பல்வேறு கிளைகளுக்கிடையே வழங்கப்படும் சேவைகளுக்கும் GST வரியை வசூலிப்பதை உறுதி செய்துள்ளது.
- மனித வளங்கள் மற்றும் சம்பளங்கள் போன்ற உட்புற சேவைகள் ஒரு மாநிலத்தில் உள்ள மையத்திலிருந்து மற்ற மாநிலத்தில் உள்ள அலுவலகங்களுக்கு மேற்கொள்ளப் பட்டால் அதற்கான விவரப் பட்டியல் வழங்கப்பட்டு அதற்கு GST செலுத்தப்பட வேண்டும் என கூறப்பட்டு உள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## பாலின் புத்துணர்வைக் கண்டறிய காகித உணர்வி

- ஐஐடி கௌகாத்தியின் அறிவியலாளர்கள் பாலின் புத்துணர்வைக் கண்டறியவும் எந்த அளவிற்கு அது பதப்படுத்தப்பட்டுள்ளது என்பதைக் கண்டறியவும் உதவும் ஒரு எளிமையான காகிதத் தொகுப்பை உருவாக்கியுள்ளனர்.
- இது ஒரு திறன்பேசி செயலியின் உதவியோடு செயல்படும். இது பால் புளிப்பாக மாறும் முன்னரே உபயோகப்படுத்தப்பட்டதை உறுதி செய்ய உதவுகின்றது.
- இந்த தொகுப்பைப் பயன்படுத்திப் பதப்படுத்தப்பட்ட பாலிலிருந்து பதப்படுத்தப்படாத பாலைக் கண்டறிய 15 நிமிடங்கள் மட்டுமே ஆகும்.
- அல்கலைன் பாஸ்பேட்டாஸ் (Alkaline Phosphatase-ACP) எனும் பாலில் உள்ள ஒரு நொதி பாலின் தரத்தைக் குறிக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது.
- அறிவியலாளர்கள் ACPயுடன் எளிதாக எதிர்வினையாற்றி நிறமாற்றமடையக் கூடியவாறு வேதியல் ஆய்வு மூலம் செறிவூட்டப்பட்ட ஒரு சாதாரணமான வடிகட்டி தாளை இந்த கண்டுபிடிப்பானை உருவாக்க பயன்படுத்தியுள்ளனர்.

## மூளைக்கான பேஸ்மேக்கர் - வாண்ட் (WAND)

- அறிவியலாளர்கள் 'கம்பியில்லா குளறுபடியற்ற நரம்பு செயல்பாடு மாற்றக் கருவி' (Wireless artifact-free neuromodulation device- WAND) எனும் பெயரிடப்பட்ட வலிப்பு மற்றும் பர்கின்சன் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.



- இது மூளையின் மின்செயல்பாட்டைக் கண்காணிக்கவும், மூளையின் மின்னோட்டத்தைத் தூண்டுவதற்காகவும் மூளைக்கான பேஸ்மேக்கர் கருவியைப் போன்று செயல்படுகிறது.
- இந்த சாதனமானது கம்பியில்லாத மற்றும் தன்னிச்சையாக செயல்படக் கூடியது ஆகும். மேலும் ஒரே நேரத்தில் இது மின்னோட்டத்தினைத் தூண்டி மின் சமிக்ஞைகளை மூளையில் பதிவு செய்கிறது.


## ஜீனோ செயற்கைக்கோளின் காட்சிப் பதிவு

- ஜீனோ விண்கலமானது வியாழன் கோளின் நிலவான லோ-விலிருந்து எரிமலைப் புகைத் திரள்களின் புதிய புகைப்படத்தை அனுப்பியுள்ளது. இது வியாழன் வாயுக் கோளின் மீதான திட்டத்தின் 17-வது பயணத்தின் போது படம் பிடித்துள்ளது.
- ஜீனோ விண்கலமானது நாசாவினால் வியாழனுக்குச் செலுத்தப்பட்ட சூரிய ஒளியால் இயங்கும் ஒரு விண்கலமாகும்.
- லோ என்பது நமது சூரியக் குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய எரிமலை அமைப்பாகும்.
- 1979-ல் நாசாவின் வாயேஜர் விண்கலத்தினால் முதன்முதலில் லோவில் உள்ள எரிமலைகள் கண்டறியப்பட்டன.
- வியாழனானது அதன் 5 நிலவுகளுடன் ஏற்படுத்தும் தொடர்புகள் குறித்த புதிய நுண்ணறிவிற்கு இந்த புகைப்படங்களானது வழிவகுக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காலநிலை மாற்ற செயல்திறன் குறியீடு

- 2019-க்கான காலநிலை மாற்ற செயல்திறன் குறியீட்டுப் (Climate Change Performance Index-CCPI) பட்டியலில் ஸ்வீடன் நாடானது மிகவும் சிறப்பான செயல்திறன் கொண்ட நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- CCPI ஆனது உலகின் 90% ஆற்றல் சம்பந்தப்பட்ட $CO_2$ உமிழ்வுக்கு காரணமான 60 நாடுகளின் காலநிலைப் பாதுகாப்பு செயல்திறன்களை மதிப்பீடு செய்கிறது.
- CCPI 2019 குறியீட்டில் மொராக்கோ இரண்டாவது இடத்தினையும் அதனைத் தொடர்ந்து லித்வேனியா மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளன.
- பட்டியலின் கடைசி 5 நாடுகளாக சவுதி அரேபியா, அமெரிக்கா, ஈராக், தென்கொரியா மற்றும் தைவான் ஆகிய நாடுகள் உள்ளன.



| Rank | | Country | Score** |
|---|---|---|---|
| 1.* | | – | – |
| 2. | | – | – |
| 3. | | – | – |
| 4. | – | Sweden | 76.28 |
| 5. | ▲ | Morocco | 70.48 |
| 6. | ▼ | Lithuania | 70.47 |
| 7. | ▲ | Latvia | 68.31 |
| 8. | – | United Kingdom | 65.92 |
| 9. | ▲ | Switzerland | 65.42 |
| 10. | ▲ | Malta | 65.06 |
| 11. | ▲ | India | 62.93 |
| 12. | ▼ | Norway | 62.80 |
| 13. | ▼ | Finland | 62.61 |
| 14. | ▼ | Croatia | 62.39 |
| 15. | ▲ | Denmark | 61.96 |

- உலகளாவிய அளவில் மிகப்பெரிய சூரிய உற்பத்தி ஆலையை விநியோக அமைப்புடன் இணைப்பதற்காக மொராக்கோவானது 2020 ஆம் ஆண்டில் 42% அளவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனை நிறுவும் இலக்கை அடையும் பாதையில் உள்ளது.
- காலநிலை மாற்ற செயல்திறன் குறியீடானது சர்வதேச காலநிலை அரசியலில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு கருவியாகும்.
- இது ஜெர்மன் வாட்ச், புதிய பருவநிலை நிறுவனம் மற்றும் ஐரோப்பாவின் பருவ நிலை செயல்திட்ட வலையமைப்பு ஆகியவற்றால் வெளியிடப்படும் ஒரு வருடாந்திர அறிக்கை ஆகும்.
- இது உலகளாவிய ஆற்றல் தொடர்பான கார்பன் உமிழ்வுகளில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமாக பொறுப்புடைய 60 நாடுகளின் பருவநிலை பாதுகாப்பின் செயல்திறனை மதீப்பீடு செய்கிறது.

# மாநிலச் செய்திகள்

## தெலுங்கானா மருத்துவமனையின் கின்னஸ் உலக சாதனை

- தெலுங்கானாவின் MNJ புற்றுநோயியல் மற்றும் பிராந்திய புற்றுநோய்

நிறுவனமானது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த அரசால் நடத்தப்படும் முதல் மருத்துவமனை ஆகியுள்ளது.




- இந்த கின்னஸ் அங்கீகாரமானது ஆண்களுக்கு சுரப்பிகளின் மீதான புற்றுநோய் குறித்து மிகப்பெரிய அளவில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தியதற்காக அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியானது ஒரே நாளில் 487 ஆண்களால் கலந்து கொள்ளப்பட்டது.

- - - - - - - - - - - - - - -